ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஓங்கார

# உபாசனை

குகதாசன் அழகேட்டை

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. ஓங்கார உபாசனை | 1 – 16 |
| 2. ஓங்காரத்தைப்பற்றி — பகவத்கீதை | 17–18 |
| 3. ஓங்காரத்தைப்பற்றி — சாயி ஞானசேகரம் ஐயா | 18–23 |
| 4. ஓங்கார மேடையில் — சிவயோகசுவாமிகள் | 24 |



பிரதிகள் – 500

விலை – ரூபா

வெளியிடுவோர் :

**சாயி அன்பர்கள்**

தாவடி.


ௐ


கிடைக்குமிடம் :

**சாயி இல்லம்**

தாவடி.

ஓம் சாயிராம்

# ஓங்கார உபாசனே

மூன்று விதமான சப்தங்கள் இந்த உலகத்தில் இருக்கின்றன. அவை சாமான்ய வர்ண மூக என்பன.

சாமான்ய என்பது சாதாரணமான சப்தம். இந்த உலகத்தோடு சம்பந்தப்பட்டது அது. பொருட்கள்விழும் பொழுதோ உடையும் பொழுதோ அல்லது ஒன்ருகச் சேரும்போதோ அல்லது பொருட்களினது அசைவாலோ உண்டாகும் சப்தமே சாமாஸ்ய சப்தம். உதாரணமாக மழை அடிக்கிறசப்தம், இடி முழக்கம், சலசல என்ற ஆற்ருேட்டத்தில் உள்ள சப்தம். அல்லது உணவு சமிக்கிற சப்தம், கண் இமைகள் மூடுவது அல்லது மிருதுவான ரோசாப்பூ இதழில் விழுந்து கொண்டிருக்கும் பனித்துளி இதெல்லாமே இந்தச் சப்தத்தை உண்டாக்குகிறது.

வர்ண என்ற சப்தம் வாயால் பேசப்பட்ட சொல்லின் சப்தம். அந்தச் சப்தம் விசேஷமான அர்த்தமும் நோக்கமும் கொண்டது. அது ஒருத்தரின் இருதயத் துடிப்பிலிருந்து வெளிப்பட்டு இன்னெருவரின் இருதயத்துடிப்பை நோக்கி ஓடும் ஓட்டம்.

மூக என்பது நிசப்தம் அல்லது பிரம்மத்தை மாயை மூடும்போது பிறக்கின்ற ஆதியான அசைவிலிருந்தும் உண்டாகிற சப்தம். இதுதான் ஓம் அல்லது பிரணவம்; 'பிரணு' என்ருல் அதிர்வது. "ஓம் இதிஏகாக்ஷரம் பிரம்மம்". ஓம் என்ற ஓரெழுத்தே அக்ஷர பிரம்மம்.

ஓம் என்பதின் எல்லையில்லாத தன்மைகளைத் தியானித்தபடி ஓம் என்பதை உச்சரியுங்கள். 'அ' தொண்டையிலிருந்து வெளிவருகிறது. 'உ' நாக்கில் உருண்

டோடுகிறது. 'ம்' உதடுகளில் முடிவடைகிறது. ஒரு மனிதனின் தொண்டையிலிருந்து வரக்கூடிய சொற்கள் எல்லாம் ஒன்று சேர்ந்த கூட்டுச் சேர்க்கையே 'ஓம்'. வேதங்களின் உபதேசங்கள் எல்லாவற்றின் சாரமே ஓங்காரம். பரமாத்மாவை அடையாளப் படுத்தும் ஆதி அடிப்படை சப்தமே பிரணவம். 'ம்' என்னும் சப்தத்திற்குப் பிறகு காதுக்குக் கேட்காத அருவமான குணமற்ற உருவமற்ற பரப்பிரமத்தைக் குறிக்கும் "மூக" என்ற நிசப்தம் இருக்கும்.

ஓம் போதுமான அளவு மெதுவாக உச்சரிக்கப்பட்டு சப்தம் உயர்ந்து கொண்டே போய் 'ம்' என்பதை அடையும் மட்டும் உச்ச சப்த நிலைக்குப் போக வேண்டும். அதற்குப் பிறகு 'ம்' இல் அது நின்று திரும்பி அது எப்படி ஏறிச்சுதோ, அப்படி இறங்கி அது ஏறுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்ததோ அவ்வளவு நேரத்தையும் இறங்குவதற்கும் எடுத்து இருதயக் குகையில் அதிர்ந்து கொண்டிருக்கும் நிசப்தத்தில் படிப்படியாக மறைந்துவிட வேண்டும். உங்களுடைய மூச்சுக்கு ஏலாது என்பதற்காக இரண்டு பாதிகளாக ஓம்காரம் செய்யப்படாது. அ, உ, ம் என்பன முழிப்பு நிலை, கனவு காணும் நிலை, நல்ல தூக்க நிலை என்பவற்றைக் குறிக்கின்றன. அப்படியிருக்க நாலாவது நிலையான துரிய நிலையோ இந்த மூன்று நிலைகளுக்கும் அப்பால் உள்ள நிசப்தத்தால் மௌனத்தால் குறிக்கப்படுகிறது. இந்த மௌனத்தில் நல்ல ஆழமாக ஒருவர் அமிழ்ந்து இறங்கி விட்டால், ஒருவரால் பிரபஞ்சத்தை நிரப்பும் "பிராண" என்ற உயிர்ச்சக்தியில் இருந்து வெளிப்படும் ஆதி பிரணவத்தைக் கேட்க முடியும். அந்தச் சப்தத்தைக் கேட்க ஒருவர் தனது சொந்த உண்மைக்கு மிக அருகே போக வேண்டும். 'உபநிஷத்' என்ற சொல்லின் அர்த்தமே இதுதான். 'உம்' என்றால் அருகே, நிஷத் என்றால் இருப்பது. அருகிலே போய் இருந்து கொள்ளுங்கள்.

அப்போது பரமாத்மா ஆத்மாவுடன் மெதுவாகக் கதைப் பதைக் கேட்கலாம்.

கேள்வி: சுவாமி இந்தப் படைப்பைப் பொறுத்தவரை ஓம் என்ற சப்தத்தின் சரியான விளக்கம் என்ன? சுவாமி தன்னுடைய சங்கற்பத்தால் பெரிய பொருட் களையும் சின்னப் பொருட்களையும் உண்டாக்குகிறார். படைப்புக்கும் அதன் பராமரிப்புக்கும் அதே சங்கற் பமா பாவிக்கப்படுகிறது?

சுவாமி: ஓம் கடவுளுடைய சங்கற்பமும், கர்மமுமே இந்தப் படைப்பை உண்டாக்கியது. இந்த இடத்தில் கர்மம் என்று சொல்லப்படுவது வேலையையல்ல. அதனர்த்தம் 'சலனம்'. அதாவது 'அசைவு'. அல்லது 'அதிர்வு'; ஏதாவது அசைவுடன் கூடிய சப்தம். இந்த இடத்தில் கடவுளுடைய சங்கல்ப்பத்தோடும் அவரு டைய கர்மத்தோடும் சேர்ந்து வெளிப்படுவதே ஓம். சங்கற்பம், கர்மம், ஓங்காரம் மூன்றுமே படைப்பின் போது ஒரே நேரத்தில் நடக்கின்றன.

கிருஷ்ணர் சொன்னார். வேதங்களில் உயிர்க்கு உயிர்தான் பிரணவம் என்று. வேதங்களோ அநாதி யானது. அந்த அநாதியான வேதங்களுக்கே உயிர்க் குயிரானது பிரணவம். இந்தப் பிரபஞ்சத்தில் காணப் படும் ஒவ்வொரு அணுவினதும் பொருட்களினதும் அடிப்படையாயுள்ள சூக்குமமான சாரமே பிரணவம் என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொரு ளிலும் இரண்டு பகுதிகள் இருக்கிறது. ஒன்று நாமம், மற்றது ரூபம் இந்த நாமம், ரூபம் இரண்டையுமே எடுத்துவிட்டால் அதற்குப்பின்பு இந்தப் பிரபஞ்சம் என்பதே கிடையாது. பெயரைக் கூப்பிட்டால்தான் உருவம் வரும்; கட்டுப்படும். ரூபம் பெயரில்தான் தங்கி

யிருக்கிறது. ஆனபடியால் எது கூட நிலையானது என்று ஆராய்ந்து பார்த்தால் நாமம் தான் நிலையானது என்றும் ரூபம் நிலையில்லாததென்றும் காண்பீர்கள். எத்தனையோ நல்ல சேவைகள் செய்தவர்கள் புண்ணியமான காரியங்களைச் சாதித்தவர்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கோயில்கள் கட்டியவர்களை எடுத்துப் பாருங்கள். இந்த உலகத்தில் அப்படிப்பட்டவர்களுடைய உருவத்தை மனிதரால் பார்க்க முடியாவிட்டாலும் பேரும் புகழும் பெற்ற அவர்களின் நாமங்களோ, பெயர்களோ மனிதர்களின் ஞாபகத்தில் இருக்கிறதுதானே. ரூபம் நிலைத்து நிற்கும். ஆனால் கொஞ்ச நேரத்துக்குத்தான். ஆனால் நாமமோ ரூபம் மறைந்த பின்பும் தொடர்ந்து நிலைத்து நிற்கும்.

நாமங்களோ, பெயர்களோ எல்லையில்லாதவை. அப்படித்தான் ரூபங்களும். ஆனால் இந்த இடத்தில் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. பண்டிதரில் இருந்து முட்டாள்வரை இந்த விஷயம் எல்லோருக்குமே தெரிந்திருக்கும். தெலுங்குப் பாஷையில் எல்லாமாக 52 எழுத்துக்கள் இருக்கிறது. ஆனால் ஆங்கிலப் பாஷையிலோ ஆக 26 மாத்திரம்தான் இருக்கிறது. தெலுங்கில் உள்ள எல்லாப் புத்தகங்களையோ ஆங்கிலத்தில் உள்ள எல்லாப் புத்தகங்களையோ நீங்கள் மலைபோல் உயரக் குவித்தாலும் அந்த மலை முழுக்க 52 தெலுங்கு எழுத்துக்கள் அல்லது 26 ஆங்கில எழுத்துக்கள் மாத்திரமே இருக்கும். ஒரு சொல் கூட அதிகமாக இருக்கவே மாட்டாது.

அதே மாதிரி மனித உடலில் தாமரை வடிவத்தில் ஆறு 'ஆதாரச்சக்கரங்கள்' இருக்கின்றன. இந்த ஆறு தாமரை வடிவமான சக்கரங்களில் ஒவ்வொரு இதழிலும்

ஒரு சப்தம் இணைந்திருக்கும். ஹார்மோனியத்தில் இருக்கிற reeds போல இந்த இதழ்கள் அசையும்போது ஒவ்வொரு இதழும் அதற்குரிய குறித்த சப்தத்தை எழுப்பும் இப்பொழுது சொன்னதை உன்னிப்பாகக் கேட்பவர்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாகும் இதழ்கள் அசைகிறதென்றால் யார் இந்த இதழ்களை அசைவிப்பவர் என்று. அந்த இதழ்களை அசைவிப்பதுதான் 'அனாகதத்துவனி.' சங்கற்பம் இல்லாமல் முயற்சிப்படாமல் எத்தனிக்காமல் வேறுபாடு பேதம் வித்தியாசமற்ற ஆதி சப்தம்; அதுதான் பிரணவம். மாலையிலுள்ள மணிகளைப்போல எல்லா எழுத்துக்களும் அந்த எழுத்துக்களைக் குறிக்கும் சப்தங்களும் பிரணவத்தில்தான் கோக்கப்பட்டுள்ளன கிருஷ்ணர் சொல்கிறார் பிரபஞ்சத்திற்கே அடிப்படையான பிரணவசதில் எங்களுடைய மனத்தை ஒன்றாகச் சேர்க்கும்படி.

இந்த மனத்திற்கு ஒரு தன்மையுள்ளது ஏதாவது ஒரு பொருளோடு மனம் தொடர்பு கொண்டவுடன் அந்தப் பொருளோடு ஒன்றாகச் சேர்ந்துவிடுகிற இயல்பே அது. அப்படிச் சேருவதற்காக மனம் துடியாய்த் துடிக்கிறது ஆனபடியால்தான் மனம் எப்போதும் பதைபதைத்துக் கொண்டு துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஆனால் இடைவிடாத பயிற்சியால் மனத்தைப் பிரணவத்தை நோக்கித் திருப்பி அதனுடன் ஒன்றாகிவிடுவதற்குப் படிப்பிக்கலாம். மனத்துக்கு சப்தம் என்றாலே போதும். உடனே கவரப்பட்டுவிடும். இந்தக் காரணத்துக்காகத்தான் மனத்தைப் பாம்போடு ஒப்பிடுவார்கள். பாம்புக்கு இரண்டு நச்சுத்தன்மையான குணங்களிருக்கிறது ஒன்று அதனது வளைந்த பல், மற்றது தனக்கருகால் வரும் எதனையும் கடித்துவிடுவது. இந்த இரண்டும் மனிதனிடமும் இருக்கும் குணங்களே. தனது கண் பார்வையில் படும் எல்லாவற்றையுமே மனிதன் தனக்கு சொந்தமாக்கிச் சேர்த்து வைத்திருக்கப் பார்க்கிறான். வளைவான பாதையில்தான் அவனும் நடக்கிறான்

ஆனுல் பாம்பில் புகழக்கூடிய ஒரு தன்மையிருக் கிறது. எவ்வளவுதான் நச்சுத் தன்மையும் பயங்கர மானதாகவும் பாம்பின் குணம் இருந்தாலும் பாம் பாட்டியின் மகுடிச் சப்தம் கேட்டதுமே அது தனது படத்தை விரித்துக் கொண்டு எல்லாவற்றையுமே மறந்துபோய் சப்தத்தில் இருந்து வெளிவரும் இனிமை யில் அது மெய்ம்மறந்துவிடும். அதேபோல் மனிதனும் பயிற்சியால் பிரணவத்தின் பேரானந்தத்தில் தானு கவே மூழ்கிவிடலாம். வேதங்களின் பிரணவமான பரமாத்மாவைக் கண்டறிவதற்கு இந்த சப்தோபா சனையே முதன்மையான வழி.

சாகிற நேரம் (மரணவேளை) என்பது வரப்போகிற குறிப்பிட்ட ஒரு திகதி அல்லது நாளில் நடக்கும் நிகழ்ச்சியல்ல. சாகிறநேரம் (மரணவேளை) இப் பொழுது நடக்கிற நேரம்தான். எந்த நேரமும் சாகிற நேரமாக (மரணவேளையாக) மாறிவிடலாம். ஆனபடி யால் ஒவ்வொரு க்ஷணமுமே சாகிறநேரமாகும் (மரணவேளையாகும்.) ஆனபடியால் எங்களுடைய ஒவ்வொரு க்ஷணமுமே பிரணவத்தால் நிறைந் திருக்க வேண்டும். சாவிற்குப் பிறகு ஒருவரின் தலை விதி அவர் இறக்கும் வேளையில் இருந்த எண்ணத் தாலேயே தீர்மானிக்கப்படுகிறது. அந்த எண்ணம் தான் அவருடைய அடுத்த பிறப்புக்கு அத்திவாரமா கிறது. கிருஷ்ணர் சொல்கிறுர் யார் என்னை சாகிற நேரத்தில் (மரணவேளையில்) நினைக்கிறுர்களோ அவர் என்னையடைகிறுர். சாகிறநேரத்தில (மரணவேளையில்) பிரணவத்தை நினைக்கும் எண்ணத்தைக் கொண்டு வருவதற்காக வாழ்நாள் முழுவதையும் இந்தப் பிரணவப் பயிற்சியில் செலவழிக்க வேண்டும்.

விட வேண்டியது இந்தத் தேகத்தையே, பெற வேண்டியது பரமாதமாவை. உங்களுடைய உண்மை யான வடிவமாகிய அழிக்க முடியா சத்தியமும் நித்தி யமுமான வஸ்துவை உங்கள் தேகம் கொண்டுள்ளது. அந்த வஸ்துவே ஆத்மா. நீங்கள்தான் அந்த ஆத்மா

என்றபடியால் அதை உங்களால் விட்டுவிட முடியாது. ஆனுல் உடலை விடுவதோ எப்படியென்ருல் கொஞ்ச வருடங்கள் ஒரு வீட்டிலிருந்துவிட்டு பின்பு வேற வீட்டிற்கு மாறுவதுபோல், பிறப்போ ஒரு புது வீட்டுக்குள் நுழைவதைப்போல. பிறப்பிறப்பு இரண் டுமே லௌகீகமான செயல்கள் இது ஆத்மாவைப் பாதிக்காது. ஆத்மா வீட்டுக்குள்ளே வருவதுமில்லை, வீட்டுக்கு வெளியே போவதுமில்லை இந்த தேகத் தத்துவம் என்னும் பொய்யில் மூழ்கிப் போயிருக்கிற வர்களுக்கு ஆத்மா வெளிப்பட்டுத் தோற்றமளிக்காது தேகத்தத்துவமோ (தேகமோ) தேய்வுக்கும் அழிவுக்கும் உட்பட்டது ஆனபடியால் விடுதலைக்கு உதவும் சக்தி வாய்ந்த கருவியான பிரணவத்தை தெளிவாக விளங் கிக் கொள்ள வேண்டும் இந்த உடல் இறக்கும் தரு ணத்தில் பிரணவத்தில் மனம் நிலைப்பட்டிருக்கும் இறுதி நிலைக்காக வாழ்க்கை முழுவதையும் செலவழிக்க வேண்டும். நீங்கள் சாப்பிட்ட சாப்பாட்டை உங்களு டைய ஏப்பத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். உங்களுடைய கடைசி எண்ணம் எது என்பதை நீங்கள் உட்கொண்ட சாப்பாடு காட்டிவிடும்.

கிருஷ்ணர் சொல்கிருர். இறக்கும் பொழுது ஓங் காரத்தை நினைக்க வேண்டுமென்று, ஓங்காரதை தியானிப்பதற்கு சில முன்னேற்பாடான கட்டுப்பாடுகள் தேவை உதாரணமாக புலனுறுப்புக்களின் கட்டுப்பாடு, மன ஒருங்குகுவிப்பு என்பன.

மனம் ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத் திற்கு பாய்ந்தோடினுல் குரல்வளையிலிருந்து வெளி வரும் ஓங்காரம் எப்படி எங்களுக்கு நன்மை அளிக் கும்? ஆனபடியால் ஓங்காரம் என்ற சப்தம் எங்களுக்கு விடுதலையளிக்காது. புலனுறுப்புக்கள் கட்டுப்படுத்தப் பட வேண்டும். எண்ணங்கள் ஒரு இடத்தை நோக்க வேண்டும்.

**கேள்வி:** எங்களுக்கு சாந்தியைத் தரும் மந்திரம் அல்லது ஜபமேது மிருக்கிறதா? அப்படி ஏதாவது மந்திரமிருந்தால் அதில் மிகவும் முக்கியமானது எது?

**சுவாமி:** "மந்திரம்" என்றால் என்ன? "ம" என்றால் "மனனம்" அல்லது "உருப்போடுவது", செய்வது. "த்ர" என்றால் பாதுகாப்பது. ஆனபடியால் மந்திர மென்றால் தன்னை தியானிப்பவரை எது பாதுகாக் கிறதோ அதுவே மந்திரம் எனப்படுகிறது. வேதனை, துன்பம், மரணம் என்பதில் சிக்குண்டிருக்கும் உங்களது லௌகீக வாழ்க்கையைப் பாதுகாக்கும் ஒன்றே மந் திரம். மந்திரங்கள் எல்லாவற்றினும் பிரணவமே உயர்ந்ததும் திறமானதும். அதுவே மந்திரங்களின் சக்கரவர்த்தி.

**கேள்வி:** தற்செயலாக ஒருவர் தனக்கு நம்பிக்கையான ஒரு குல தெய்வத்தின் நாமத்தை ஜெபித்தால் அதில் ஏதும் பிழை இருக்கிறதா?

**சுவாமி:** அந்த நாமத்தை பிரணவத்துடன் சேர்த்து ஜபித்தால் அது நன்மையைத்தரும். எப்படி சமுத்திர நீர் சூரியக் கதிர்களால் ஆவியாக மேலே ஆகாயத்தை அடைந்து அதற்குப் பிறகு மழையாக விழுந்து நீரோடைகளும் ஆறுகளுமாகி திரும்பவும் சமுத்திர நீராக மாறி சமுத்திரத்தை அடைகின்றனவோ அப்படி பிரணவத்தில் அடங்கியிருக்கும் இந்த எல்லாவித மந்திரங்களெல்லாம் ஜபத்தாலும் வேறு வழிபாடுகளா லும் திரும்பப் பிரணவத்தைப் போய் அடைகின்றன. தங்களது ஆதி இருப்பிடமான பிரணவத்தை மந்திரங்க ளெல்லாம் போய்ச் சேருகின்றன.

**கேள்வி:** எப்படி நிசப்தமான நிலையை எங்களால் உண்டாக்கலாம்? எப்படி சப்தமற்ற மௌனமான நிலை பிரம்மமாகும் ?

மறுமொழி: வேதங்கள் சொல்கிறது. இந்தக் கண்ணுல் பார்க்கும் உலகம் மாயையென்று. அதே வேதங்கள் சொல்கிறது இந்த மாயையெல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவரே ஈஸ்வரன் என்று. ஆனபடியால் இந்தப் படைப்பெல்லாவற்றையும் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நீங்களே ஈசுவரனுகி விடுங்கள். உங்களைப்பொறுத்தவரை இந்தக் கண் கூடான உலகம் சைபராக ஒன்றுமில்லாமலாகிவிட்டால் அந்த நிலைதான் நீங்கள் பிரம்மத்தை அடையும் நிலை. அந்த ஒன்றுமில்லாத நிலைக்கு வராவிட்டால் உங்களால் பிரம்மத்தையடையவே முடியாது. அது நிச்சயம். எப்படி பா பு தனது செட்டையைக் கழற்றி புதுத்தோலைப் பெறுகிறதோ அப்படிச் சாதகனும் தனது பழைய செட்டையை விட்டு தான் தியானித்துக் கொண்டிருந்த மந்திரம் குறிப்பிடும் குல தெய்வத்தின் உருவத்தை எடுக்கிருன்.

கேள்வி: மன்னியுங்கள் சுவாமி. எனக்கு இதெல்லாமே விளங்கவில்லை. இன்னும் கொஞ்சம் உதாரணம் மூலம் இதைத் தெளிவாக்குங்கள்.

மறுமொழி: ஒரு முட்டை இருக்கிறது. முட்டைக்கு மேல் கோழி கொஞ்ச காலம் உட்கார்ந்து இருக்கையில் கோழிக்குஞ்சு உள்ளே முழுமையாக வளர்ந்து முட்டைக்கோது வெடித்து உடைந்ததும் அது வெளி வந்து தனது சொந்த உருவத்தை எடுக்கிறது. அதே மாதிரி சாதகனும் பரிசுத்தமான உணர்வுடன் மந்தி ரத்திலும் அதன் கருத்திலும் லயித்துப்போய் தனது மனத்தில் மந்திரத்தின் கருத்தையே எப்போதும் உருப் போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் செய்ய அவனது மனத்தில் எந்தவிதமான குறுக்கீடு மில்லாமல் காட்சி தோன்றி அஞ்ஞானம் உடைந்து

அவன் தனது உணர்வில் உருவகித்த தெய்விகத்தின் ஒளியில் பிரகாசிப்பான்.

**கேள்வி:** எல்லாப் பொருட்களுமே பிரணவத்தில் தோன்றி கடைசியாகப் பிரணவத்திலேயே மறைகின்றன என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அதே பெரியவர்களே சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பேர்கள்தான் பிரணவத்தை உச்சரிக்கலாம் மற்றவர்கள் உச்சரிக்கப்படாது என்று.

**ஸ்வாமி:** எது இந்த உலகம்? பஞ்ச பூதங்களின் கூட்டுச் சேர்க்கையே இந்த உலகமே அன்றி அது வேறொன்றல்ல. இந்தப்பஞ்ச பூதங்களுக்கு உயிர்க்குயிராய் இருப்பதே பிரணவம். ஆனபடியால் பஞ்சபூதங்களாலான இந்த உலகத்திற்கும் உயிர்க்குயிராக இருக்கிறது இந்தப் பிரணவம். மலைப்பாறைகளினது உச்சியிலிருந்து கர்ச்சித்துக் கொண்டு விழும் நீர் சமுத்திர அலைகள் கரையில் உள்ள தீவில் அடிக்கும் இரைச்சல் இரண்டுமே பிரணவத்தை மாத்திரமே உச்சரிக்கின்றன. உங்களுக்குள்ளிருப்பதும், உள்ளுக்கிழுத்து வெளிவிடும் காற்றின் சப்தமுமே பிரணவம் தான். உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ பல்லக்கைத் தங்கள் தோள்களில் தூக்கிக் கொண்டு போகிறவர்கள் போடும் 'ஹோ, ஹோ' என்ற சப்தமும் பாரங்களைத் தூக்குவோரின் பெருமுச்சுச் சப்தமும் ஆற்றங்கரையில் உள்ள பாறைகளில் துணி தோய்ப்பவர்களின் 'ஹீ ஹோய்' என்ற சப்தங்களுமே பிரணவத்துடன் அதிர்கின்றன. பிரணவத்தை அதன் உட்கருத்தைப் பற்றிய பூரணமான அறிவுடன் சேர்த்து உச்சரியுங்கள்: அப்படிச் செய்வதால் கெதியில் இந்த உலகக் கவலைகளின் பாரம் உங்களை விட்டுப் போய்விடும். மூச்சு ஓட்டத்தில் உள்ள பிரணவமும் துன்பத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கும் ஒன்று. ஒரு

குறிப்பிட்ட சிலர்தான் உச்சரிக்கலாம் வேறு சிலர் உச்சரிக்கப்படாது என்பது அர்த்தமே இல்லாதது: மூச்சு விடாதவர்களுக்கு சில வேளைகளில் பிரண வத்தை உச்சரிப்பதற்கு அதிகாரமில்லாமலிருக்கலாம். ஆனால் மூச்சு விடுகிற எல்லோருமே அப்படி மூச்சு விடும் பொழுதே பிரணவத்தை உச்சரிக்கிறார்கள். ஆனபடியால் எவராவது பிரணவத்தை உச்சரிக்க மறுக்கப்படாது. மரணவேளையில் எப்படி ஒருவர் கடவுளை நினைக்கலாம், என்று அர்ச்சுனன் கேட்ட பொழுது கிருஷ்ணன் என்ன மறுமொழி சொன்னார் தெரியுமா? சாகிறவர் தன்னை விட்டுப் பிரியாது தன்னுடன் ஒன்றாயிருக்கும் பிரணவத்தை தனது மனத் தில் நினைவு கூர வேண்டும் என்று சொன்னார். அப் படிப்பட்ட பக்தனே உயர்ந்த பேறடைகிறான். ஆனபடி யால் இந்தப் பிரணவத்தை உச்சரிக்க எல்லோருக்கும் உரிமை இருக்கிறது.

கேள்வி: பிரணவ உபாசனை மூலம் எப்படி இலட்சி யத்தை அடையலாம்? ஒருவர் தியானம் செய்யும் பொழுதுதான் தியானிக்கிற அதுவாக எப்படி வர முடியும்? இந்த ஒப்பில்லாத மந்திரம் எப்படி எங்க ளுக்கு உதவுகிறது என்பதை உதாரணங்கள் மூலம் தெளிவாக விளக்குங்கள்.

ஸ்வாமி: மிச்சம் நல்லது. பிரணவமே வில். ஆத்மாவே அம்பு. பரப்பிரம்மமே இலட்சியம். ஆனபடியால் வில் வித்தைப் பயிற்சி செய்கிற வீரனைப்போல ஒரு சாதக னும் மனத்தின் பதட்டங்களால் குழப்பப்படாது லட்சி யத்தில் சாதகன் மனத்தை ஒருங்கு குவிக்க வேண்டும். அதற்குப் பின்பு வில்லைப் பிடித்திருப்பவன் லட்சியத்தி லேயே மூழ்கி மெய்ம்மறந்து விடுவான். தான் தியா னிக்கும் அந்த லட்சியமாக அவன் மாறி விடுவான்.

கேள்வி: நீங்கள் சொன்னது போல ஆத்மாவைக் கண்டறிந்து இந்தப் பஞ்ச பூதங்களாலான உடலுடன்

பிரணவத்தில் ஒருவர் ஒன்றுகச் சேரமுடியுமா? உடலிலிருந்து ஆத்மாவை வேருகப் பிரிக்க முடியுமா? எப்படி அதைச் செய்யலாம்?

**ஸ்வாமி:** மனிதன் தியானமும் மற்றயை சாதனைகளாலும் பிரணவ மந்திர உச்சரிப்பாலும் ஆத்மாவைக் கண்டறிந்து இந்த உடலிலிருந்து ஆத்மாவை வேருகப் பிரித்து விடலாம். அது எப்படி என்றுல் தயிரிலிருந்து வெண்ணெயைக் கடைந்தெடுப்பது போல, எள்ளு விதையிலிருந்து எண்ணெய் எடுப்பது போல, நிலத்துக்கடியிலிருந்து தண்ணீர் கிண்டி எடுப்பது போல, விறகிலிருந்து நெருப்பு எடுப்பது போல க்டைகிறது, முறுக்கிப்பிழிகிறது, நசுக்குகிறது, துளைக்கிறது என்று இந்த வேலைகள் தேவைப்படுகிறது. அவ்வளவுதான். என்ன நடக்கிறதென்றுல் உடலிலிருந்து ஆத்மா வேருகிவிடுகிறது, எப்படி என்றுல். உடல்தான் ஆத்மா என்ற உணர்வு மறைந்து விடுகிறது.

நாங்கள் மூச்சு விடும்போது மூச்சு "சோஹம்" என்ற சப்தத்தைப் போடுகிறது. சோஹம் என்றுல் அவரே நான் என்பது. அப்பொழுதுகூட இன்னும் அந்த நான் என்பது இருக்கிறது. ஆனுல் நல்ல தூக்க நிலையில் 'அவர்', 'நான்' என்பது போக (ஸோ, ஹ என்பது போய்விட) ம் என்பதும்தான் மிஞ்சும். ஓம் தான் எஞ்சி இருப்பது. ஒன்றுன ஒன்றுதான் அப்பொழுது இருக்கும்.

**கேள்வி:** ஓம் என்பதை எப்படிச் சரியாக உச்சரிப்பது?

**ஸ்வாமி:** ஓம் என்ற சப்தம் 'அ' 'உ' 'ம்' என்ற மூன்று சொற்கள் கொண்டது. 'அ' தொண்டையிலிருந்து மிருதுவாகத் தொடங்குகிறது. 'உ' வாயிலிருந்து வெளிப்பட்டு சப்தம் கூடிக்கொண்டே போகிறது. 'ம்' என்பது உதடுகளால் குறைந்து கொண்டேபோகும்

சப்தமாக உச்சரிக்கப்படுகிறது. தூரத்தில் வரும் விமானத்தின் (பிளேன்) சப்தம் போல அருகே வரவர அது சப்தத்தைக் கூட்டி கடந்து போகும்போது சப்தம் மறைகிறது. 'அ' என்பதே உலகம், 'உ' மோட்சம் 'ம்' தெய்வீகம். இது புலன்களுக்கு அப்பாற்பட்டது.

கேள்வி: தற்செயலாக இந்த உச்சரிப்பை முறையாகப் பூரணமாக ஒருவர் செய்யத் தவறி விட்டால் என்ன ஆகும்?

ஸ்வாமி: அன்பிருந்தால் பூரணமாக முறையாக ஓம் உச்சரிக்க வேண்டியதென்பது முக்கியமல்ல. தாய்க்கும் பிள்ளைக்கும் இடையிலான பாசப் பிணைப்பே அன்பு. பிள்ளை அழுததும் பிள்ளையின் அழுகைச் சப்தம் சகிக்க முடியாத ஒன்று என்று தாய் கவலைப்படுவதேயில்லை. தாய் பிள்ளையிடம் ஓடிப்போய் அதற்கு ஆறுதல் கொடுக்கிருள் தெய்வீகத்தாய் எங்குமே இருக்கிருள்: ஸ்வாமி இங்கே இருக்கிறார். ஆனுல் தெய்வீகத்தாய் எங்குமிருக்கிருள். ஆனபடியால் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. கடவுளை ஒருவர் வேண்டத் தொடங்கியவுடனேயே அந்த வேண்டுதலுக்கு மறு மொழி தருவதற்கு தெய்வீகத்தாய் அங்கேயே இருக் கிருள். இந்த விஷயங்களிலெல்லாம் அன்புதான் முக்கி யம். கடவுளிடம் பக்தி என்ருல் கடவுளிடம் அன்பு கொள்வது என்பதே அர்த்தம். உண்மையான ஓம் தாளுகவே எழுந்து வெளிப்படுவது. அது இரண்டு மூக்குத் துவாரங்களுக்குள்ளாக எங்களது புருவ மத்தி யுள் நுழைந்து காதுகளுக்குள்ளாக வெளியே உலகத் திற்குப் போகிறது. ஒரு ரேடியோ டவரில் இருந்து வெளிப்படும் ஒலிபரப்புப்போல.

கேள்வி: இந்த ஓம் என்பது பாவிப்பதற்கு பயங்கர மான ஒன்ருே? நான் கேள்விப்பட்டிருக்கிறேன் இந்த ஓம் என்ற சப்தம் தொடர்ந்து இடைவிடாது உலகத்

தைப் பேணிப்பாதுகாத்துக் கொண்டிருக்கிறதென்று. ஆனால் மனிதன் ஓம் என்று சொன்னவுடன் இந்தத் தொடர் அறுபட்டுவிடுவதால் மனிதனது வாழ்க்கையும் அறுபட்டுவிடுகிறது. இப்படிப் பல சம்பவங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அத்துடன் இந்த உலகத் தொடர்பை விட்டுவிட்ட சந்நியாசிகளுக்குத்தான் ஓங்காரம் தோதானது என்று சொல்லுகிறார்கள்.

ஸ்வாமி: யார் சந்நியாசி? சந்நியாசிகளில் மூன்று வகையானோர் இருக்கிறார்கள். முதலாவது காவிதரித்த சந்நியாசிகள். இவர்கள் காவி உடையை அணிந்து தாங்கள் இந்த உலகத்தைத் துறந்தவர்கள் என்று போலியாக நடிக்கிறார்கள். இந்தியாவில் இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் அடுத்தது புலன்களை அடக்கிய சந்நியாசி இவர்கள் புலன்களை அடக்கியவர்கள். இவர்கள் இந்த உலகத்தை விட்டுவிட்டு ஒருபோதுமே தனியான இடத்தைத் தேடிப் போவதில்லை. இவர்கள் இந்த வாழ்க்கையிலேயே இருந்து கொண்டால்தான் அவர்களுக்கு தூண்டுதல்கள் ஏற்படும்போது தங்களது செயல்களைப் பார்த்து தங்கள் புலனடக்கம் உண்மையானதா என்று பார்ப்பவர்கள். மூன்றாவது வகையினர் கடவுளிடம் தனது செயல்கள் எல்லாவற்றினதும் பலன்களையெல்லாம் கொடுத்துவிட்டு, கடவுளிடம் பூரணமாக சரணடைந்தவர்கள். இந்தச் சந்நியாசிக்கு அகங்காரம் துப்பரவாகக் கிடையாது. இவரின் இருதயம் பரிசுத்தமானது. அவருடைய புலன்கள் அமைதியடைந்து துவைதங்களால் பாதிப்படையாமல் இருக்கும். இருதயம் பரிசுத்தமாகிவிட்டால் ஓம் என்ற சப்தத்தின் தொடர்ச்சி முறிந்து விடாது.

கேள்வி: ஸ்வாமி சொல்வதின்படி ஒவ்வொரு மூச்சோடும் ஸோஹம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எப்படிச் செய்யலாம்? ஒவ்வொரு மூச்சோடும் அதைச் சொல்ல வேண்டுமா?

**ஸ்வாமி:** மூச்சு ஏற்கனவே ஸோஹம் என்று சொன்னபடி உள்ளது. வழமையான முறை உள் மூச்சுப் போகும்போது 'ஸோ' என்றும் 'ஹம்' வெளி மூச்சு வரும்போதும் சொல்வதே. மனத்தில் அதைச் சொல்லுங்கள். அது மனத்தை அமைதிப்படுத்தி, அடக்கி நிலை பெறச் செய்யும். அதற்குப் பிறகு அது தன்பாட்டிலேயே உங்களுக்கு கைவந்துவிடும். பகலில் 'ஸோஹம்' என்று சொல்லுங்கள். இரவில் நித்திரையில் அந்த சப்தம் தானாகவே இயற்கையாகவே ஓம் என்று மாறுகிறது.

**கேள்வி:** அவனே நான் என்று ஒருவர் எண்ணலாமா?

**ஸ்வாமி:** இல்லை சப்தம்தான் ஸோஹம். அது இந்திய பாசையோ அமெரிக்கப் பாசையோ அல்ல. அது மூச்சுவிடும்போது உண்டாகும் சப்தம். அதன் அர்த்தத்தை விளங்குவது பரவாயில்லை.

**கேள்வி:** ஸ்வாமி சொல்கிறார் மூச்சின் இயல்பான வழமையான சப்தம்தான் ஸோஹம் என்று. ஆனால் காது கொடுத்துக்கேட்டால் அந்த மாதிரி சப்தம் எதுவும் எனக்குக் கேட்கவில்லையே!

**ஸ்வாமி:** மூக்குக் குள்ளாலும், வாய்க்கூடாகவும் வரும் சப்தம் மனம் அல்லது எண்ணங்களுடன் கலந்துவிடுகிறது. அத்துடன் அந்த சப்தங்களை வெவ்வேறு வழியில் கேட்கலாம். ஆனால் உண்மையில் மனம் அசைந்து இயங்காமலிருக்கும்போது மூச்சும் பூரணமாக சுயமாக எழுந்து இயல்பாக ஓடும்போது அந்த மூச்சின் சப்தம்தான் ஸோஹம். வாயினால் போகும் மூச்சு வயிற்றுக்குள் தான் போகிறது.

**கேள்வி:** கிருஷ்ணர் அருச்சுனனுக்குச் சொன்னர் மனத்தினுல் ஓம் என்பதைச் சொல்லும்படி.

**ஸ்வாமி:** ஓம் எல்லா இடத்திலும் இருக்கிறது மணம், நாக்கு, இருதயம் என்று எல்லா இடத்திலும் இருக்கிறது. ஓம் என்ற சப்தத்தை முதலில் நாக்கிலும் பின்பு மனத்திலும் உச்சரியுங்கள். 21 தரம் ஓம் உச்சரிப்பது முக்கியம்; 5 புற இந்திரியங்கள், 5 அக இந்திரியங்கள், 5 பிராணன்கள், 5 கோசங்கள், ஜீவன் என்பதை 21 தரம் குறிக்கிறது.

பாபா — சந்தேக நிவாரணி
— சுவாமியுடன் சம்பாஷணைகள் -Hislop
— தோவாஹினி.

ஓம் சாயிராம்

# ஓங்கார உபாசனை

ஓங்காரத்தைப் பற்றி பகவத் கீதை.

1. ரஸோ ஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி
சஸிஸூர்யயோ
ப்ரணவ: ஸர்வவேதே ஷு சப்த: கே பௌரு
ஷம்ந்ருஷு:
[அத். 7 சுலோ. 8]

பொருள்: குந்தியின் மைந்தா! நான் நீரில் சுவையாகவும், சந்திர சூர்யர்களிடத்து ஜோதியாகவும், எல்லா வேதங்களிலும் ஓங்கார மாகவும், வானில் ஓசையாகவும், மக்களிடத்து ஆண்மையாகவும், இருக்கிறேன்.

2. ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருதிசய
மூர்த்ன் யாதாயாத்மன; ப்ராண மாஸ்திதோ
யோகதாரணும்
ஓமித்யேகா க்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்
மரன்
ய: ப்ரயாதித்யஜன் தேஹம்ஸ யாதி பரமாம்
கதிம்
[அத். 11 சுலோ. 12, 13]

பொருள்: பொறிவாயில் யாவையும் அடக்கி மனத்தை ஹ்ருதயத்தில் நிறுத்தி, தன் பிராணனை உச்சந் தலையில் வைத்து, யோக தாரணையில் நிலைத்திருந்து 'ஓம்' என்கிற ஏகாக்ஷரமாகிய பிரம்ம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு என்னை ஸ்மரித்துக் கொண்டு யார் உடலை நீத்துப் போகிறானோ அவன் பரம கதியைப் பெறுகிறான்.

3. பிதா ஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ
வேத்யம் பவித்ர மோங்கார ருக் ஸாம யஜு ரேவச
[அத். 9. சுலோ. 17]

பொருள்: இந்த ஜகத்தின் தந்தை, தாய் பாட்டனுரானவனும் கர்ம பலனைக் கொடுப்பவனும் அறியத்தக்கவனும் தூய்மை செய்பவனும், ஓங்காரம் ரிக், சாமம் யஜுர் வேதங்கள் ஆகின்றவனும் நானே.

4. மஹர்ஷிணும் ப்ருகுர ஹம் கிராமஸ்மீ யேக
மக்ஷரம்
யக்ஞானும் ஜபயக்ஞோஸ்மி ஸ்தாவரானும்
ஹிமாலய.

பொருள்: மஹரிஷிகளுள் நான் பிருகு. வாக்குகளுள் ஓரெழுத்தாகிய ப்ரணவம் நான். யக்ஞங்களுள் நான் ஜபயக்ஞம். ஸ்தாவரங்களுள் நான் ஹிமாலயம்.

5. தஸ்மாதோ மித்யுதா ஹ்ருத்ய யக்ஞதானதய: க்ரியா
ப்ரவர்தந்தே விதானோக்தா ஸததம் ப்ரஹ்ம
வாதினும்.
[அத். 17 சுலோ. 24]

பொருள்: ஆகையால் வேதமறிந்தவர்கள் வேதவிதிப்படி செய்யும் யக்ஞ - தான - தபக் கிரியைகள் எப்பொழுதும் ஓம் என்று உச்சரித்துத் தொடங்குகின்றன.

---

## ஓங்காரத்தைப் பற்றி - சாயி ஞானசேகரம் ஐயா

இந்த ஓங்கார சாதனை இந்த லட்சியத்தைத் தருகிறது.

என்ன லட்சியம்?

ஒன்றுமில்லாத ஒன்முன தத்துவமாக நாங்கள் இருக்க வேணும். அதுதான் எங்களுடைய உண்மை. நான் எனது என்னும் கேடு எங்களைப் பிடித்திருக்கிறது. பலவாகக் கண்டு சலனப்படுகிறோம்

இவை யெல்லாம் போக வேணும்.

இந்த ஓங்காரத்தில் ஓ—... ஓ ..... என்னும் சப்தம் எங்கும் பரவி விரிந்து நான் எல்லாமான ஒரு தத்துவமாக வரவேண்டும், என்னும் வேண்டுதலோடு ஒரு

பெரு விருப்பத்தோடு "பிரம்மமே; நான் நீயாக வேணும், உன்னோடு லயப்பட வேண்டும்" என்னும் பாவனையோடு இந்தச் சாதனை செய்யப்பட வேண்டும்.

இந்த ஓங்காரம் எல்லாச் சாதனைகளிலும் மேலானது.

லேசானது.

கூடிச் செய்யும் பொழுது இன்னும் தத்துவமாகிறது.
நேரடியாக இதை நாங்கள் காணலாம்.
நாங்கள் ஓங்கார உபாசனை செய்கிறபொழுது யார் செய்கிறது?

அந்தத் தெய்வீகத் தத்துவம்தான் சப்தம் செய்கிறது. அந்தத் தெய்வீகம்தான் ஓங்காரம் செய்கிறது. அதை அனுபவிக்கிறது.

நான் என்பதே இல்லை என்னும் அறிவோடு செய்தால் அது மிகவும் மேலான ஒரு இடம்.
எந்த லட்சியத்தை நாங்கள் தேடுகிறோமோ அது வந்து விடும்.

இந்தச் சப்தம் செய்கிறபோது எங்களுடைய நினைவோ பிறருடைய நினைவோ இருக்கலாகாது. இந்தச் சப்தத்திலே ஈடுபட்டு அது பரந்து போகிறதைப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும். அந்த நிசப்தம் முக்கியமானது; ஆழமானது. அதைக் கவனித்து அதனுடைய சுகத்தை இனம் கண்டு கொண்டு கொள்ள வேண்டும், அதை வளர்க்க வேண்டும்.

வேதங்கள் உயர்ந்த ஒரு சாதனையாக இந்த ஓங்காரத்தைச் சொல்லி இருக்கின்றன.

இது பிரம்ம உபாசனை
பிரம்மம் எஞ்சாத பூரணம்
பிரம்மம் ஒன்று
பிரம்மம் எல்லையற்றது.

நாதம் பிரம்மமாயிருக்கிறது. நாதம் பிரம்மத்தின் ஒரு தன்மை. அது பிரம்மம்போல் எங்கும் ஊடுருவியிருக்கிறது. அந்த நாதத்தை எழுப்பி அது எங்கும் ஊடுருவியிருக்கிறதைக் கண்டு

பிரம்மம் போல் பிரம்மமாவதற்கு
நாதம் போல் எங்கும் நிறைந்து வளர

அந்தப் பிரம்ம தத்துவம் எங்களிடத்தில் தலைப்படும்.

இந்த ஓங்காரத்தை உபாசிக்கின்ற பொழுது அந்த சப்தம் எங்கும் பரவுவதாகப் பாவனை இருக்க வேண்டும். அந்த நிசப்தம் முக்கியமான இடம். அதில் ஒன்றுமில்லாத ஒரு இடம் உண்டு.

அது சுகமானது.
அது எல்லையற்றது.

அங்கே எண்ணமில்லாமல் தோன்றி மறையும்
ஒன்றுமேயில்லாத இடம்— —
— — அந்த இடத்தைக் கண்டு
இனம் கண்டு

அப்பேற்பட்ட தன்மையை எங்களிடத்தில் வளர்க்க வேண்டும்.

எல்லாரும் ஓங்காரம் செய்கிற பொழுது இணைகிற பொழுது

ஒரு சப்தம்தான் கேட்கிறது.

எல்லோரும் அந்தச் சப்தத்தைத்தான் கேட்கிறோம்.

அது — — ஒன்றுபடுகிற இடம்.

இவ்வளவு ஆரவாரமும் நினைவுகளெல்லாம் உள்ளவர்கள் அந்த ஓங்காரம் முடிந்த

— — அந்த இடை வெளியான — —
.. ... நிசப்தத்தில் — — ஒன்றுமில்லாமல்

எல்லாரும் இருந்து விடுவார்கள்.

இந்தச் சுகத்தை...... இந்த இடத்தை .. —
இனம் கண்டு

வளர்க்க விரும்ப வேண்டும்.
மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

இது
ஆத்ம வழி.
உபநிஷதங்கள் எல்லாம் மிக உயர்ந்த சாதனே என்று முழங்குகின்றது.
மாண்டுக்கிய உபநிஷதம் முழுவதும் இந்த ஓங்காரத்தைப் பற்றியே.

எல்லா உபநிஷதங்களேயும் படிக்காவிட்டாலும் மாண்டுக்கியம் ஒன்றே விடுதலேக்குப்போதும் என்று சொன்னுல், அது இந்த ஓங்காரத்தின் தகுதிதான். அந்தச் சரியான பாவத்திலே அதைச் செய்ய வேண்டும்.

இல்லேயென்ருல் அது ......
...... வெறும் சப்தம்தான்.

இவ்வளவு ஒரு உயர்ந்த ஒரு சாதனேயை பிரசாந்தி நிலேயத்தில் சுவாமி எப்போதும் செய்ய அமைத்திருக்கிருர்.

'My Life is my message'

என்னுடைய வாழ்க்கையே எனது செய்தி என்று சொன்னவர்.

முதலாவதாக காலேயில்
தியானம், அதன் பிறகு
ஓங்காரம்.

என்று வைத்திருக்கிருரே மிகவும் பெரிய சாதனே என்றுதான் அதனே வைத்திருக்கிருர்.

இந்த உபாசனேயை......
...சித்தம் அழகியவனே – என்று விழித்து —

சித்தத்தில் பற்றுக்கள் பந்தங்கள் குறைந்தால் தான் சித்தத்தில் அழகுண்டாகும். அப்பேற்பட்டவரை விழித்து-

"உப நிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரம் என்னும் தனுசை எடுத்து உபாசனையால் கூர்மையாக்கப்பட்ட ஜீவனாகிய அம்பைத் தொடுத்து..."

உபாசனை செய்து செய்து ஜீவன் கூர்மையடைகிறது.

அதாவது தனது லட்சியத்தை அறிந்து கொள்வது தான்.

இந்தப் பிரம்மத்தில் நாம ரூபமற்றுக் கலந்துவிட வேண்டும் என்பதுதான்...... லட்சியம்.
அங்கே——

பிரம்மமாகிற பெரிய எல்லையற்ற தகைமை உண்டாகும்.

"உப நிஷத்தில் சொல்லப்பட்ட ஓங்காரம் என்னும் தனுசை எடுத்து உபாசனையால் கூர்மையாக்கப்பட்ட ஜீவனை—

...அம்பாகத் தொடுத்து...
பிரம்ம பாவனை நிறைந்த சித்தத்தால்
— இழுத்து

அக்ஷரப் பிரம்மமாகிய இலட்சியத்தில் லயமடையச் செலுத்துவாய்.

இந்த ஜீவனை அந்தப் பிரம்மத்தோடு ஒன்றுபட்டு தன்னை இழந்து பிரம்மமாகிற இந்தச் சாதனைக்கு இந்த ஓங்காரம்தான் இழுக்கிறது.

அம்பிலே வில்லைப் பூட்டி...
— அந்த நாண் கயிறு

அதுதான் இந்த அம்பை வெகுதூரம் கொண்டுபோய் அந்த லட்சியத்துக்கு அனுப்புகிறது.

நாண் கயிறு இழுக்கிற — —
 ... ஓசைதான் ஓங்காரம்.

ஓங்காரம் எவ்வளவு பக்குவமாய்ச் செய்யப்படுகிறதோ அந்த ஜீவன் அந்தப் பிரம்மக் குறியை சரியாக வைத்துக்கொண்டு இருக்கிறதோ அந்தப் பிரம்மமாகிய லட்சியத்தில் ஜீவன் போய்ச் சேர்ந்து.
 ஜீவன் -

அந்தப் பிரம்மத்தில் கரைந்துவிடும்.
 'அப்பில் உப்புச் சேர்ந்தாற்போல்
 ஆண்டவனில் கரைந்துவிடு'

"கருவாம் பர வெளியில் கரைந்தொன்றாய்ப் போனேனே".

 இந்தக்....

கருத்துக்களை வைத்துக் கொண்டு
 ஓங்காரம் செய்கிறபோதுதான் அது பெரிய பலனை உண்டாக்கும்.

எங்களிடத்திலுள்ள
 அகங்காரம்
 மமகாரம்
 — எல்லாம்
கரைந்து போய்விடும்.

—[1989, 1990 தாவடியில் நிகழ்த்திய
ஒலிப்பதிவு செய்யப்பட்ட
சத் சங்கங்களிலிருந்து]

---

மாணிக்கவாசகர்

1. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா —
 — சிவபுராணம்
2. உய்யு நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட் பொருள் ஐயன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே —
 — அச்சோப்பதிகம்

அருணகிரிநாதர்

3. நாத விந்து கலாதி நமோ நம

ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஓங்கார உபாசனை

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி - குதம்பாய்
ஒன்றையுங் காணேனடி.

தூங்காமல் தூங்கும் சுகம்வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி - குதம்பாய்
சும்மா விருந்தேனடி.

ஆங்காரம் போச்சுது ஆணந்தம் போச்சுது
அவனேநா ளுனேனடி - குதம்பாய்
அவனேநா ளுனேனடி.

நீங்காத நின்மல நிட்டை பலித்தது
நீநா னில்லையடி குதம்பாய்
நீநா னில்லையடி.

ஒன்றென இரண்டென ஓதமு டியாமல்
ஒலிய மானேனடி — குதம்பாய்
ஒலிய மானேனடி.

நன்றெனத் தீதென நவில முடியாத
நாதன்ருள் சேர்ந்தேனடி — குதம்பாய்
நாதன்ருள் சேர்ந்தேனடி.

கண்ணுக்குக் கண்ணு யிருக்கின்ற கர்த்தனைக்
கண்டு களித்தேனடி — குதம்பாய்
கண்டு களித்தேனடி.

அண்டமும் பிண்டமும் ஒன்ரு இரண்டோவென்
றறியா திருந்தேனடி — குதம்பாய்
அறியா திருந்தேனடி.

ஆதார மாறும் அவத்தையோ ரைந்தும்
அடியோடு போச்சுதடி — குதம்பாய்
அடியோடு போச்சுதடி.

பாதார விந்தத்தைக் காணுமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி — குதம்பாய்
பணியாமற் பணிந்தேனடி.

— சிவயோகசுவாமிகள் —

[நற்சிந்தனை]

ஸ்ரீ லங்கா அச்சகம் யாழ்ப்பாணம் • தொலைபேசி 24175 •